

# தலைப்பு: பொக்கிஷங்கள்

வழங்கியோர்

(கலிவெண்பா)

முத்தொழில் பொங்குமொரு முன்னைப் பொழுதினிலே
தத்தம் தொழிலில் தரணியில் வாழ
புவனமது காணும் பொக்கிஷந்தான் போற்றி

கவனமே கொண்டு கலைவளம் காத்தும்
பசுவிரண்டு பூட்டிநல் பாரிலுலா காண
கொசுக்கடித் தொல்லையும் கோடிசுகம் தந்தும்
சுகமுடன் வாழ சுவையான தாக்கி
மகத்தான வீடும் மகிழும்தேன் கூடாய்
மழைமகள் தூவிட மண்மகள் ஓங்கும்
தழையுடன் தானாய் துளிர்திட வைத்தும்
வடிகாலில் நீர்வடிய வரப்புயரக் கட்டி
செடிகொடிகள் நட்டு செழிப்புறக் காண
விதைத்தநல் நெல்லும் விளைச்சல்களும் தந்தும்
புதையலாக மூத்தோரும் பொன்னாக காத்து
அயலவர் சேர்ந்தும் அழகுடனே கூடும்
துயரில்லா வாழ்வும் துணையது வந்திட
அன்பெனும் அச்சாணியில் ஆச்சியும் அப்புவும்
துன்பம் மறந்திட தூயவர் நட்புடன்
பண்பெனப் பாடுவதைப் பார்.

*சரளா விமலராஜா*
*சுவீஸ்*